# மரபுச் சொற்களை அறிவோம்

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 3, பருவம் 3, பாடம் 5**

**பொம்மலாட்டம் ஆடலாம்; மரபுச் சொற்களைக் கற்கலாம்...**

ம. அமிர்த கௌரி

மூன்றாம் வகுப்பில் மூன்றாம் பருவப் பாடமான 'மரபுச் சொற்களை அறிவோம்' என்ற பாடத்தை நடத்துவதற்குத், திசைமானி இதழில் வெளிவரும் பாடத்திட்டத்தை மாதிரியாகக் கொண்டு நானும் ஒரு பாடத்திட்டம் தயாரித்தேன். இப்பாடம் படக்கதைகளோடு இணைந்த, தாத்தாவிற்கும் பேத்திக்கும் இடையிலான உரையாடல். இந்தப் பாடத்தில் பல புதிய வார்த்தைகளும் குழந்தைகள் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களும் நிறைய இருந்தன.

**பாட நோக்கம்**:

நாகரீக வளர்ச்சியில் நாம் மறந்துபோன மரபுச்சொற்கள் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்ளுதலும் தமிழகத்தில் மறந்துபோன பாரம்பரிய கலைகளை நினைவு கூறுதலுமே இப்பாடத்தின் நோக்கங்கள் ஆகும்.

**கற்றல்-கற்பித்தல் நிகழ்வுகள்**:

மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்துவதற்காகச் சிறு விளையாட்டு ஒன்று நடத்தப்பட்டது. மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து, அவர்களிடம் நான் இரகசியமாக ஏதேனும் ஒரு செயல்களைக் கூறுவேன் (உ.ம்.) கரும்பலகையில் எழுது; கண்ணாடியை எடுத்துப் பார். அச்செயலை அவர்கள் செய்ய வேண்டும்; மற்ற மாணவர்கள் அச்செயலை கண்டுபிடித்து, அவரவர் பேச்சு வழக்கில் கூறினர். பேச்சு வழக்கில் கூறியதற்குச் சரியான வாக்கியத்தை நான் குறிப்பிட்டேன்.

அடுத்து, பாடத்தின் பயிற்சிப் பகுதியிலிலுள்ள விலங்குகளின் இளங்கன்றுகளுடைய பெயர்களை அறிதல் பகுதியை நடத்தினேன். இதற்காக பல்வேறு விலங்குகளின் உருவங்களை (பசு, ஆடு, குதிரை) வரைந்தும் வெட்டியும் ஒரு அட்டைப்பெட்டியில் போட்டு வைத்தேன். மாணவர்கள் அட்டைப்பெட்டியில் இருந்து ஒவ்வொரு படமாக எடுத்து அப்படத்தில் உள்ள விலங்கின் பெயரையும் அதன் குட்டியின் பெயரையும் கூற வேண்டும். இந்தச் செயல்பாட்டின் போது சில மாணவர்கள் அவர்களுடைய பேச்சு வழக்கில் குறிப்பிட்டனர், அப்போது சரியான மரபுச் சொல்லைக் கூறினேன். **உ.ம்**: மாணவர்கள் சிங்கத்தின் குட்டியைச் 'சிங்கக் குட்டி' என்று கூறினர்; **'சிங்கக் குருளை'** என்று குறிப்பிட வேண்டும் என்று நான் விளக்கினேன். இவ்வாறு மரபுச் சொற்களை அறியும் பயிற்சியை மாணவர்களுக்கு அளித்தேன்.

இப்பாடத்தைப் பொம்மலாட்டமாக நடத்த முடிவு செய்து, பொம்மலாட்டப் படங்களைத் தயார் செய்தோம். அதற்கான வசனங்களையும் பாட்டுகளையும் தயாரித்து, பின் அதற்கான பயிற்சியில் ஈடுபட்டோம். அதை அவர்கள் மகிழ்ச்சியோடு செய்தனர். மற்ற வகுப்பு மாணவர்களுக்கும் இப்பொம்மலாட்டத்தை நிகழ்த்தும்படி தலைமையாசிரியர் கேட்டுக்கொண்டார். அதனால் ஒவ்வொரு வகுப்பையும் அழைத்து நிகழ்த்தினோம்.

பொம்மலாட்டத்தின் ஒரு பகுதி,

வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

பொம்மலாட்டம், இது பொம்மலாட்டம்....

தாத்தா பேத்தி ஆடப்போற பொம்மலாட்டம்...

மரபுச்சொற்களை அறிந்துகொள்ளும்

பொம்மலாட்டம், இது பொம்மலாட்டம்.....

மாட்டுக் கொட்டாயின் மரபுச்சொல் -மாட்டுத்தொழுவம்

ஆடு வளருமிடம் ஆட்டுப்பட்டி

எலியின் வீடு எலிவலை

கிளிக்கு வீடு மரபொந்து... (வணக்கம்! வணக்கம்!)

சிங்கத்தின் குட்டி சிங்கக் குருளை

அணிலின் குட்டி அணிற்பிள்ளை....

விரிவாக்குதல் பகுதியில் பேச்சு வழக்குச் சொற்களைக் கொடுத்து உரிய மரபுவழி சொற்களைக் கண்டறிந்து வரும்படிக் கூறினேன். மதிப்பிடுவதற்கு, நானே பயிற்சித்தாளைத் தயாரித்து மாணவர்களிடம் வழங்கினேன். குழுவாகக் கலந்துரையாடி அதைச் செய்தனர். இதுபோன்று திட்டமிட்டு பாடம் நடத்திய பொழுது மாணவர்கள் நன்றாகக் கற்றுக் கொண்டது போல் இருந்தது.



**ம. அமிர்த கௌரி**, தொ.ப.ஆ, அரசு தொடக்கப் பள்ளி, மூலகுளம்